# மாற்றுத்திறனாளி மாணவர்கள் மெட்ரோவில் இலவச பயணம்

சென்னை, டிச. 3–

சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினத்தையொட்டி, மெட்ரோ ரயிலில், மாற்றுத்திறனாளி மாணவ – மாணவியர், இலவச பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும், டிச., 3ம் தேதி, சர்வதேச மாற்று திறனாளிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கரூர், சேலம், கோவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும், தேனி மாவட்டங்களில் உள்ள, அரசு உதவிபெறும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ – மாணவியரை, மெட்ரோ ரயிலில் சுற்றுலா அழைத்து செல்ல விரும்பியது.

இப்பள்ளிகளை சேர்ந்த, வாய்பேச முடியாத, காதுகேளாத, மன வளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவ – மாணவியர், 260 பேர், நேற்று, சென்னை அழைத்து வரப்பட்டனர். எழும்பூர் மெட்ரோ நிலையத்தில் இருந்து, விமான நிலையம் வரை, மெட்ரோ ரயிலில், இலவச பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

ரயில் பயணத்தின் போது, மாணவ – மாணவியருக்கு, மெட்ரோ ரயில் மற்றும் நிலையங்களில் உள்ள வசதிகள் குறித்து, மெட்ரோ ரயில் ஊழியர்கள் விளக்கி கூறினர்.